# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

அசல் மனு எண்.0942/2016/ந

ஆணை எண்: 007/2017

நாள்: 09.01.2017

திரு. K.G. பூபதி,
மனை எண்.58, 3வது தெரு,
நண்பர்கள் நகர், பூவிருந்தவல்லி,
சென்னை – 600 056. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி,
பூவிருந்தவல்லி, சென்னை. – எதிர் மனுதாரர்

## ஆணை:

முறையீட்டு மனுதாரரது 08.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு, 08.09.2016 நாளன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று, எண்.0942/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டுள்ள இரு கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன:-

(i) பூவிருந்தவல்லி நகராட்சி பகுதியில் 21-வது வார்டில் பொது மக்களின் அத்தியாவசியமான குடிநீர் மேல்நிலைத் தொட்டியை, மாற்று இடத்தில் அமைக்காமல் இடித்தது குறித்து விசாரணை;

(ii) நகராட்சியின் 19-வது வார்டில் நண்பர்கள் மனைப்பிரிவின் பூங்கா பணி ஆரம்பிப்பதற்கு முன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அங்கீகார வரைபடத்தில் உள்ள உரிய அளவுகளின்படி, உரிய அளவீடு செய்து மதில் சுவர் அமைக்கப்படவில்லை என்ற சந்தேகத்தினை தெளிவுபடுத்துதல்."

3. மேற்குறிப்பிட்டவாறான கோரிக்கைகளடங்கிய மனு மீதான பதிலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (எண்:0942/2016/ந, நாள்:08.09.2016) அனுப்பப்பட்டது. மேலும், 03.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி, 03.11.2016 அன்று ஆஜரான மனுதாரர் முறையீட்டில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை மீள வலியுறுத்தி தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

4. இம்முறை மன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.0942/2016/ந, நாள்:29.11.2016ன்படி பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் 15.12.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டு உரிய விசாரணை நடைபெற்றது. அவ்விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட வாக்குமூலத்தில், புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழமையானதென்பதால் பாதுகாப்பு கருதியும், அந்த இடம் நகராட்சி அலுவலக கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டு உரிய ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்ததாலும் இடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த பகுதிகளுக்கு நேரடியாக குடிநீர் வழங்குவதால் தண்ணீர் பிரச்சனை இல்லை எனவும் நாளொன்றுக்கு இரண்டு முறை குடிநீர் வழங்கப்படுவதாகவும் உறுதி அளிக்கப்பட்டது. மேலும், நண்பர்கள் நகர் மனைப்பிரிவு பூங்கா இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை எனவும் முறைமன்ற நடுவ ஆணைகளின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அங்கீகாரத்தின்படி அளவீடுகளை மீள ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாக உறுதி அளிக்கப்பட்டது.

5. இம்முறை மன்ற நடுவ ஆணைகளின்படி பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர், நண்பர்கள் நகர் மனைப்பிரிவு பூங்கா இடத்தை நேரில் ஆய்வு செய்து தனது ஸ்தல ஆய்வு அறிக்கையினை (ந.க.எண்.139/2014/இ1, நாள்:23.12.16) கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

"மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களின்முன்பு 15.12.2016 அன்று நேரில் ஆஜராகி பூங்கா இடத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்ததன் தொடர்ச்சியாக 23.12.2016 அன்று நண்பர்கள் நகர் பூங்கா இடம் ஆய்வு செய்யப்பட்டது. பூவிருந்தவல்லி கிராமம் சர்வே எண்.442/1A, 1B, 443/1A, 444, (ம) 445/1,2 நண்பர்கள் நகர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு PPD/L.O. N.O. 149/92, நாள்: 13.11.1992 மற்றும் பூவிருந்தவல்லி பேரூராட்சி கடிதம் ப.மு.எண்.724/89, நாள்: 29.07.1993ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் பூங்கா– 4125 ச.மீ. பரப்பளவு கொண்ட இடம் தானப்பத்திர எண்.5371/1992, நாள்:28.09.1992-ல் செயல் அலுவலர், பூவிருந்தவல்லி பேரூராட்சி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்கான இடம் கிழக்கில் 258 அடி, மேற்கில் 168 அடி, தெற்கில் 212 அடி, வடக்கில் 202 அடி, என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் கிழக்கில் 293 அடி, மேற்கில் 172.9 அடி, தெற்கில் 212 அடி மற்றும் வடக்கில் 198.6 அடி என்ற அளவுகளில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

பூங்கா இடம் அளவீடு செய்ததில், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுப்படி பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் கிழக்கில் 35அடி, மேற்கில் 4.3 அடி அளவுகள் அதிகமாகவும், தெற்கில் 212 அடி சரியாகவும், வடக்கில் 3.5 அடி குறைவாகவும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. நண்பர்கள் நகர் மனைப்பிரிவு பூங்காவை ஒட்டி, மேற்கு பகுதியில் ராஜேஸ்வரி நகர் என்ற மற்றொரு மனைப்பிரிவு அமைந்துள்ளது. ராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவில் மனை எண்.49 உரிமையாளர் திரு.சுப்பிரமணி த/பெ. சிங்காரம் என்பவர் கட்டடம் கட்டி வசித்து வருகின்றார். 08.03.1993-ந் தேதிய பத்திர ஆவணத்தின்படி சுற்றுச் சுவர் அமைத்துள்ளார். இக்கட்டடத்திற்கும் பூங்காவினை ஒட்டி கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவருக்குமிடையில் இடம் காலியாக உள்ளது.

நகராட்சியின் மூலம் பூங்காவிற்கு சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ள இடம் அளவீடு செய்யப்பட்டதில் பூங்காவின் வடமேற்கில் (மூலையில்) சுமார் 3.5 அடி குறைவாக உள்ளது என்பதை அறிய முடிகிறது. இந்த 3.5 அடி குறைவு என்பது வரைபடத்திற்கும் புலத்திற்கும் ஏற்படும் சிறு வித்தியாசம் இயல்பான ஒன்றாகும்." மேலும் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை எனவும் வாக்குமூலத்தில் ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. மேற்குறிப்பிட்ட நகராட்சி ஆணையரது வாக்குமூலம் மற்றும் ஸ்தல ஆய்வு அறிக்கையினை ஏற்று இம்முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கையினை கைவிடலாமெனக் கருதி இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//——

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/1/2017

செயலாளர்.

25.1.17

பெறுநர்:

1. திரு. K.G. பூபதி,
   மனை எண்.58, 3வது தெரு,
   நண்பர்கள் நகர், பூவிருந்தவல்லி,
   சென்னை – 600 056.

2. நகராட்சி ஆணையர்,
   பூவிருந்தவல்லி நகராட்சி,
   பூவிருந்தவல்லி, சென்னை – 600 056.